எம்.சி.ஓ.பி எண்: 1820/2021 தேதி: 17.07.2025

மசா. : 1

பெயர் : பலராமன்

த/பெ. : சின்னராஜ்

வயது : 57

**<u>சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 6 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என் மனைவிதான் புகார் கொடுத்தார் என்றால் சரி. விபத்து குறித்த மாதிரி வரைபடம், குற்றப்பத்திரிக்கை மற்றும் மோட்டார் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவைகளை தாக்கல் செய்தால் இந்த விபத்து என்னுடைய கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளது என்று தெரியவரும் என்பதால் அவைகளை தாக்கல் செய்யாமல் தவிர்த்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் இருசக்கரவாகனத்தை ஓட்டிச்சென்றேன். எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டியதால் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கையின் போது எனக்கு அபாரதம் விதித்த காரணத்தால் அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்து நேருக்கு நேர் மோதி நடந்தது என்றால் ஆமாம். எனக்கு எதிரே வந்த வாகனம் மோதி விபத்து நடந்தது. விபத்து நடந்த பிறகுதான் அந்த வாகனம் வந்தது தெரியும். தீடிரென்று வாகனம் மோதிய பிறகுதான் பார்த்தேன். எதிரே வந்த வாகனத்தை கவனிக்காமல் வந்தது என்னுடைய தவறு என்றால் இல்லை. அவர் அவருடைய பாதையை விட்டு ஏறி வந்தார். அந்த சாலையில் தடுப்புச்சுவர் கிடையாது. அது இருவழிச்சாலை. விபத்து சமயத்தில் நான் தலைக்கவசம் அணியவில்லைஎன்றால் அணிந்திருந்தேன். என்னுடைய தொழில், வருமானம், வருமான இழப்பு குறித்து ஆவணம் தாக்கல்

செய்யவில்லை. மருத்துவமனையில் 3 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன் என்றால் சரி. அதன் பிறகு வெளியே சிகிச்சை பெற்றேன். அதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி,. புத்தூர் கட்டு போட்டதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. எனக்கு ஏற்பட்ட காயங்கள் குணமாகி விட்டது என்றாலும், ஊனமோ, இயலாமையோ இல்லை என்றாலும் வருமானம் ஈட்டும் திறன் குறையவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் முதலாம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டிக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாத காரணத்தால் காப்பீடு விதிமுறைகள் மீறப்பட்டுள்ள காரணத்தால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. விபத்து என்னுடைய அஜாக்கிருதையால் நடைபெற்றுள்ள காரணத்தால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.